


கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்டு திசைமாறி கடலில் தத்தளித்து, கடலோர காவல் படையினரால் மீட்கப்பட்ட 21 மீனவர்கள் இன்று (04.12.2017) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்து, தங்களை மீட்க துரித நடவடிக்கை மேற்கொண்டமைக்காக நன்றி தெரிவித்தனர். உடன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.ராகுல்நாத்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ, இணை இயக்குநர் மீன் வளத்துறை திரு.லேமெக் ஜெயக்குமார் ஆகியோர் உள்ளனர்.

செ.வெ.எண்:908 நாள் 04.12.2017

# பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 30-ஆம் தேதி அன்று ஏற்பட்ட பலத்த மழை மற்றும் ஒகி புயலால் பாதிக்கப்பட்டு கடலில் தத்தளித்த மீனவர்களை தேடும் பணி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியில் கடலோர காவல்படையை சேர்ந்த கப்பல்கள் மற்றும் ஹெலிகாப்டர் உள்ளிட்டவைகள் மூலம் மீனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதனை தொடர்ந்து, தமிழக அரசின் தொடர் நடவடிக்கையின் காரணமாக, இன்று (04.12.2017) கன்னியாகுமரி மாவட்டம் பூத்துறை பகுதியை சேர்ந்த 10 மீனவர்கள், தூத்தூர் பகுதியை சேர்ந்த 1 மீனவர், நீரோடி பகுதியை சேர்ந்த 2 மீனவர்கள், களியக்காவிளை பகுதியை சேர்ந்த 1 மீனவர், நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த 4 மீனவர்கள் மற்றும் அஸ்ஸாம் மாநிலத்தை சேர்ந்த 3 மீனவர்கள் என மொத்தம் 21 மீனவர்கள் கேரளா மாநிலம் ஆலப்புழா பகுதியில் கடலோர காவல் படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்டுள்ள 21 மீனவர்களுக்கும் ஆலப்புழா பகுதியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு உணவு, உடை உள்ளிட்டவைகள் வழங்கபட்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பத்திரமாக வாகனம் மூலம் அழைத்து வரப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மீட்கப்பட்டுள்ள 21 மீனவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்து தங்களை பாதுகாப்பாக மீட்க துரித நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்திற்கும் நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.ராகுல்நாத்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ, இணை இயக்குநர் மீன் வளத்துறை திரு.லேமெக் ஜெயக்குமார் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.கன்னியாகுமரி மாவட்டம்